பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 25 | திங்கட்கிழமை | 08.04.2024 | அதிர்வு 251


### வவுனியா பாடசாலையொன்றில்

## மாணவனைத் தாக்கிய ஆசிரியை நேற்று கைது

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை

06▶

## திருமலை வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை திறப்பு



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டு வந்த புத்தர் சிலை திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை, சிவபுரி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மடத்தடி பகுதியில் வீரகத்தி பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டு வந்த புத்தர் சிலை கடந்த வெள்ளிக்கிழமை மாலை அவசர அவசரமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அந்தப் பகுதியில் வசிக்கும் சிறியளவிலான மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

07▶

# மொட்டுக் கட்சி சார்பில் மிகச் சிறந்த வேட்பாளர்

### களமிறக்கியே தீருவோம் என்று மஹிந்த திட்டவட்டம்



"ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி சார்பில் மிகச் சிறந்த வேட்பாளரைக் களமிறக்குவோம்" - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

07▶

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலை மாவட்ட மாநில மாநாடு



(எச். ஹலீம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட மாநில மாநாடு நேற்று திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் மாநாடு இடம்பெற்றது.

இதில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




சட்டக் கல்லூரியில் இரண்டு வருடக் கல்வி அறிவு, நீண்ட காலம் நீதிமன்றச் செய்தியாளன் என்ற அனுபவம் கொண்டவன் நான். அதனால் சட்டத்துறை தொடர்பான சில விடயங்களை தமிழ் வாசகர்களுக்கு புரியும் விதத்தில் எடுத்து வைக்கும் பொறுப்பு – கடப்பாடு – எனக்கு இருக்கின்றது.

அந்த வகையில் முக்கிய இரண்டு விடயங்களை இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவது – சட்டத்தரணிகளாக இருந்து கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செய்கின்றவர்கள் சட்ட – நீதித்துறை விவகாரங்களை ஒட்டி மக்களை முட்டாள்களாக்கும் விதத்தில் தெரிந்து

06▶





# ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் ஐக்கிய மக்கள் சக்தியில் இன்று இல்லை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





"ஐக்கிய மக்கள் சக்தியில் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் இல்லை. அதன் பொருளாதாரக் கொள்கையை மொட்டுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட குழுவே தற்போது கையாள்கின்றது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற அரசியல் கட்சி பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொருளாதார நெருக்கடி காரணமாக ஜூலை 2022 இல் ஏற்பட்ட அரசியல் எழுச்சியுடன், நாட்டின் கட்சி முறைமையிலும் மாற்றம் ஏற்பட்டது. இன்று அனைவரினதும் ஒத்துழைப்புடன் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்துள்ளது. இந்த நிலையைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வது நம் அனைவரின் பொறுப்பாகும்.

கடந்த இரண்டு வருடங்களாக எமது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டங்களை சிலர் தமது நாடாளுமன்ற பதவிக் காலத்தில் மேற்கொள்ளவில்லை. நாட்டில் பொருளாதார சிக்கல்கள் இருந்தபோதிலும், குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக அஸ்வெசும திட்டத்தை ஆரம்பித்து, அது வரை இருந்த கொடுப்பனவை மூன்று மடங்காக உயர்த்தப் பாடுபட்டோம். மேலும், 20 லட்சம் பேருக்கு நிரந்தர காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. இவை நாட்டின் பொருளாதாரம் ஒழுங்காக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்காத வேலைத்திட்டங்கள் என்றே கூற வேண்டும்.

இந்த வேலைத் திட்டங்களை தொடர நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையானவர்கள் எனக்கு ஆதரவளித்துள்ளனர். பொதுஜன பெரமுனவின் ஒரு பகுதி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இதில் அடங்கும். ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதில் உள்ளனர். இந்த கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து முன்னேற வேண்டும்.

பொதுஜன பெரமுனவில் இருந்தாலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தாலும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தாலும் சரி, வேறு கட்சியாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

கடந்த காலத்தில் அரசியல் கட்சிகளில் பிளவுகள் ஏற்பட்டன. மொட்டுக் கட்சியில் இருந்து சிலர் எதிர்க்கட்சிக்கு சென்றனர். இப்போது அந்தக் குழு ஐக்கிய மக்கள் சக்தியை வழிநடத்துகிறது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தாங்கள் சிறிகொத்தாவைக் கைப்பற்ற வேண்டும் என்று 2020 இல் ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி என்று அழைக்கப்படும் குழு தற்போது மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசியக் கட்சி இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாத்தவன் நான். ஜே.ஆர் ஜெயவர்தன, ஆர்.பிரேமதாஸ, டி.பி. விஜேதுங்க இவர்கள் அனைவருடனும் நாங்கள் பணியாற்றினோம்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி என்று தங்களை அழைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்த உரிமையும் இல்லை. இன்று எமக்கு பொதுஜன பெரமுன மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. நாட்டு நலனுக்காக நாம் இணைந்து செயற்பட வேண்டும். இன்று அரசியல் போக்கு மாறிவிட்டது.

நீங்கள் அனைவரும் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். 20 லட்சம் நிரந்தர காணி உறுதிப் பத்திரங்களில் 10 லட்சம் இதுவரை தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்குள் அந்தப் பத்திரங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும். எனவே இந்த கண்டி மாவட்டத்தில் உள்ள நீங்கள் அனைவரும் நல்ல ஒருங்கிணைப்புடன் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பீர்கள் என நான் நம்புகிறேன்." – என்றார்.

இதேவேளை, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி அமைப்புகளின் ஏற்பாட்டில் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கலந்துகொண்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்து மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் கிராமங்களை ஒன்றிணைத்து முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் அங்கத்துவத்துடன் ஆலோசனை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு தெரிவித்தார்.

இதன்படி கிராமங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு நேரடியாக அறிவிக்கும் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் "அஸ்வெசும" வேலைத்திட்டம் மற்றும் "உறுமய" காணி உறுதி வேலைத்திட்டத்தில் நேரடியாக பங்குபற்றுமாறு முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்த ஜனாதிபதி, தேவையான வசதிகளை செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்க வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னோடிகளாக உள்ளூராட்சி பிரதேசங்களில் உள்ள இளைஞர்களை முன்னோக்கி கொண்டு வர வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளராக புளொட்டின் குரு நியமனம்!






(கே.வசந்தன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளராக செயற்பட்ட ந. நல்லநாதர் (ஆர்.ஆர்.) மரணமடைந்த நிலையில் வெற்றிடமாக காணப்பட்டஅந்தப் பதவிக்கு புளொட்டின் ர.ரட்ணலிங்கம் (குரு) தெரிவு செய்யப்பட்டார்.

குத்து விளக்கைச் சின்னமாகக் கொண்ட ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் செயலாளர் பதவி எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு புளொட் அமைப்பிற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் புளொட்டின் மூத்த தலைவர் ஆர்.ஆர். அப்பதவியில் தொடர்ந்தார். அவர் அண்மையில் மரணமடைந்த நிலையில் அவரின் இடத்திற்காக புளொட் அமைப்பை சேர்ந்த நாகலிங்கம் ரட்ணலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் உயர்மட்டக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.



# நாட்டிலிருந்து விதைகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

முதன்முறையாக, நாட்டிலிருந்து பல வகையான விதைகளை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி மிளகாய், கத்தரிக்காய், வெண்டைக்காய் மற்றும் சோளம் போன்ற விதைகள் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இந்த விதைகளுக்கு அதிக தேவை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விவசாயத் திணைக்களமும், தனியார் துறையும் இணைந்து இந்தப் புதிய வகை விதைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

விதைகளின் அளவை அதிகரித்தல் மற்றும் பதப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இலங்கையில் உள்ள தனியார் நிறுவனமொன்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# ஐ.தே.கட்சியின் கொள்கையுடன்தான் நாட்டின் தலைமைப் பதவிக்கு வந்தேன்

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்





"ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் பணியாற்றி, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் கீழ் கட்சியைப் பாதுகாத்து, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவுடனும் இணைந்து செயற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரதமராகி, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பாரம்பரியத்துடன் தான் நாட்டின் தலைமைப் பதவிக்கு நான் வந்தேன்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தசியக் கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இன்று நாம் ஒரு வித்தியாசமான அரசியல் சூழலில் இங்கு கூடியுள்ளோம். 2022 இல் நாட்டின் பொருளாதாரம் மட்டுமன்றி அரசியல் கட்சி முறைமையும் உடைந்தது. எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்றி மக்களை உயிர்ப்பிப்பதே இன்றைய நமது முதன்மையான பொறுப்பாகும்.

இந்த பொருளாதார நெருக்கடியை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்திலிருந்தே அடையாளங் கண்டிருந்தது. இந்த பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள 03 பில்லியன் டொலர்கள் தேவை என்று 2020 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிதான் அறிவித்திருந்தது.

ஆனால் ஒரு குழு ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்து, சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து, ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியது. அவரது தந்தையின் ஆட்சியில் கட்சி பிளவுபடும் போது கட்சியை காத்தவன் நான் என்ற வகையில் அது தொடர்பில் வருத்தமடைகிறேன். இந்தக் கட்சியை உடையவிடாமல் நாம் முன்னேறியிருந்தால் இன்று அரசியல் ரீதியாக பலமான கட்சியாக இருந்திருப்போம். எங்களுக்கு ஆட்சி அமைக்க வாய்ப்பு இருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியைக் கைவிட்ட போது தங்களால் இதனை செய்ய முடியாது எனவும் முடியுமான தரப்பினருக்கு ஆதரவளிப்போம் என்றும் கூறினார்கள். அந்த சமயம் அவர்களின் ஆதரவு தேவைப்பட்டது. ஏன் எங்களால் ஆட்சி அதிகாரத்தைப் பெற முடியவில்லை? கட்சி பிளவுபட்டதன் காரணமாக இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதியினர் எதிர்க்கட்சியில் உள்ளனர். மேலும், நான் பிரதமராக பதவியேற்றதும் எனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று மீண்டும் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அந்த ஆதரவு கிடைக்கவில்லை.

அதன் பின்னர் இந்த நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. பிரதமராக இருந்த நான் ஜனாதிபதி பதவியை ஏற்கவிருந்தேன். ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி பதவியை விரும்புவதால் எதிர்க்கட்சித் தலைவரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று கூறினார்கள். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கே நாட்டின் ஜனாதிபதி பதவி வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பொதுஜன பெரமுனவில்

05



# 15 ஆம் திகதியை அரச விடுமுறை தினமாக அறிவிப்பதற்கு எந்தத் தீர்மானமும் இல்லை

எதிர்வரும் 15ஆம் திகதியை அரச விடுமுறை தினமாக அறிவிப்பதற்கு எந்தவொரு தீர்மானமும் இல்லை என பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன், அன்றைய தினத்தை விடுமுறை தினமாக அறிவிக்குமாறு அரச பணியாளர்களிடமிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், புத்தாண்டு விடுமுறையுடன் இணைந்த நீண்ட விடுமுறை காரணமாக மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், அந்தந்த நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைகளை தொடர்வதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.




பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவினால் இந்த அறிவுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.



# ஐ.தே.கட்சியின் கொள்கையுடன்தான் நாட்டின் தலைமைப் பதவிக்கு வந்தேன்

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து வெளியேறிய சிலருடன் இணைந்து பிரதமராக வர முயன்றார்.

நாட்டின் நெருக்கடியான வேளையில் பிரதமருக்கு சந்தர்ப்பம் கொடுப்போம் என்று மொட்டுக் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்கள் கூறினார்கள். ஆனால் மொட்டுக் கட்சியினர் மொட்டு உறுப்பினருக்குத்தான் ஆதரவு வழங்க வேண்டும் என்ற பொதுஜன பெரமுன தலைவர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். அதன் பிறகு, அவர் உட்பட ஒரு சிறு குழுவினர் எதிர்க்கட்சிக்குச் சென்றனர். ஜனாதிபதி தெரிவுக்கு மொட்டுக் கட்சி வேட்பாளரை நியமிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். பின்னர் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும நிறுத்தப்பட்டார். அப்போது சஜித் பிரேமதாஸ பிரதமராக வருவதற்கு தயாராக இருந்தார். ஆனால் முதலில் பிரதமர் பதவியை ஏற்க முடியாது என்று ஓடியிருந்தார்.

எப்படியோ நான் ஜனாதிபதியானேன். அரசியலைப் பற்றி சிந்திக்காமல், நாட்டைப் பற்றி சிந்தித்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரினேன். எப்படியோ எல்லோரும் இணைந்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம். மொட்டுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கிராமங்களில் ஒன்றுக்கொன்று எதிராகச் செயற்பட்ட குழுக்கள். ஆனால் நாங்கள் நாட்டுக்காக ஒன்றுபட்டோம். தற்போது நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்முடன்தான் இருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தி அன்று கூறியது.சிறிகொத்த மாத்திரம் தான் எம்மிடம் இல்லை என்றார்கள். எமக்கு அதிகாரத்தை தாருங்கள் சிறிகொத்தவை கைப்பற்றுவோம் என ஐக்கிய மக்கள் சக்தி கூறியது. ஆனால் தற்போது ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட மொட்டுக் குழுவுடன் கூட்டணி அமைத்துள்ளனர்.

இன்று சஜித்துடன் ரஞ்சித் மத்துமபண்டார மட்டுமே



அமர்ந்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வேறு யாரும் அங்கு இல்லை.

இன்றைய ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் இல்லை. அப்படியானால் இன்று அவர்களை ஐக்கிய தேசியக் கட்சி என்று அழைக்க முடியாது. கடந்த தேர்தலில் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சி தங்களிடம் இருப்பதாக கூறினார்கள். அப்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஒருபகுதியினர் அவர்களுக்கு வாக்களித்தனர். இப்போது ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட மொட்டுக் கட்சியினருக்கு ஐக்கிய மக்கள் சக்தி சரணடைந்துள்ள நிலையில், அதை ஐக்கிய தேசியக் கட்சி என்று எப்படிச் சொல்ல முடியும்? அதனால் கிராமங்களில் ஐ.தே.கவினர் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஏமாந்துள்ளனர். அவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சுற்றி அணிதிரள வேண்டும்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் பணியாற்றி, ஜனாதிபதி பிரேமதாஸவுடன் கட்சியைப் பாதுகாத்து, பின்னர் டி.பி.விஜேதுங்கவை ஜனாதிபதியாக்கி அதே கட்சியின் பிரதமரான பின்னர், நான் நாட்டின் தலைவராக தெரிவானேன். அப்படிப்பட்ட ஒரு தலைமுறை கொள்கைப் பாரம்பரியத்துடன்தான் நான் முன்னோக்கி வந்தேன். ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க சிலர் முயற்சித்தனர்.”– என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு தவறான அரசியல் பிரசாரங்களை செய்யக்கூடாது. அது தப்பு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் ஒரு சட்டத்தரணி. நேற்று கல்முனையில் 14 ஆவது நாளாகப் போராடும் தமிழ் மக்கள் மத்தியில் போய் நின்று ஒரு கருத்தை சொல்லி இருக்கிறார்.

"....(கல்முனை தமிழ் பிரதேச செயலர் பிரிவு விடயம் தொடர்பில்) நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். அந்த வழக்கினை மீறி கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகம் எனக் கூறி கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. வழக்கினைத் தாக்கல் செய்தவர்கள் (தமிழ் தேசிய கூட்டமைப்பினர்)பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏன் திருகோணமலையில் நீதிமன்ற அவமதிப்பு என்று வழக்கு தாக்கல் செய்த உங்களுக்கு இங்கு இவ்வாறு வழக்குத் தாக்கல் ஒன்றினை நீதிமன்ற அவமதிப்பு என்று மேற்கொள்ள முடியாதா? முடியும். ஆனால் எங்களது தலைவர்கள் கல்முனை வடக்கை சிங்கள - பௌத்த பேரினவாதத்துடனும் சில அரசியல் தலைவர்களிடமும் விற்றுவிட்டார்கள்." - என்று முழங்கியிருக்கின்றார் அவர்.

சுத்த சுத்துமாத்து பேச்சு இது. அரசியல் என்பதற்காக சட்டத்தைத் தம் இஷ்டப்படி வளைத்து சுகாஷ் பேசக்கூடாது.

தமிழரசு கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. கலையரசன் சார்பில் வழக்கு போட்டிருக்கின்றார்கள். சுமந்திரன் முன்னிலையாகி வாதாடுகின்றார். மேன்முறையீட்டு நீதிமன்றம் வழக்கை பொறுப்பேற்றிருக்கின்றது. சில இடையீட்டுத் தரப்பினர் - முஸ்லிம் பிரதிநிதிகள் - நுழைந்துள்ளனர். இடைக்கால தடை உத்தரவு கேட்கும் மனுதாரரின் கோரிக்கை இன்னும் விசாரிக்கப்படவில்லை. விசாரணை இனித்தான் நடக்க வேண்டும்.

நீதிமன்றம் வழக்கை பொறுப்பேற்றமையைத் தவிர, எந்த உத்தரவும் வழங்கப்படவில்லை. அப்படி இருக்கையில் என்ன விவகாரத்துக்கு நீதிமன்ற அவதூறு வழக்கு தொடுப்பதாம்? நீதிமன்றத்தின் எந்த உத்தரவை மீறினர் என்று வழக்கு போடுவதாம்? அவற்றின் விவரங்களை மக்கள் விளங்கக் கூடியதாக சுகாஷ் எழுத்தில் தருவார் எனின் நாம் பிரசுரிப்போம். அவரின் விதண்டாவாதத்தையும் அம்பலப்படுத்துவோம்.

சட்டத்தரணிகளைக் கொண்ட கட்சி தானே சுகாஷின் அணி, தமிழர்கள் சார்பிலான மேல்நிலை நீதிமன்ற வழக்குகள் கொஞ்சத்தை கையாளும் பொறுப்பை அவர்கள் கையில் எடுத்துக் கொண்டு இத்தகைய விதண்டாவாதங்களை மக்கள் முன் வைத்தால் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும்.

இனி, அடுத்த விடயம். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை வழக்குத் தொடர்பானது. அதைப் பார்க்கலாம்.

அந்த வழக்கையொட்டி சிறீதரன் எம்.பி. சூழ்ச்சி,அது,இது என்றெல்லாம் சலித்துக் கொண்டார். பின்னணி என்ன என்று கொஞ்சம் தேடிப்பார்த்து நோண்டினேன்.

அதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு 'ஃபிளாஷ்- பாக்'கிற்கு போக வேண்டி உள்ளது.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் வழக்குகள் தாக்கலாகி தடை உத்தரவுகள் பெறப்பட்ட அன்று ஒரு செய்தி வெளிவந்தமை வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம்.

கட்சிக்குத் தடை உத்தரவு விதித்திருக்கும் வழக்குத் தொடர்பாக கட்சிக்காகத் தான் முன்னிலையாகி வாதாடுவார் என்று உடனடியாகவே சுமந்திரன் கருத்து வெளியிட்டிருந்தார். அது அன்றைய 'மாலை முரசு' இதழிலும் வெளிவந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

ஆனால் திருகோணமலை வழக்கில் சுமந்திரனும் ஓர் எதிராளி என்று குறிப்பிடப்பட்டமையால் அந்த வழக்கில் தமக்காக மட்டுமே சுமந்திரன் முன்னிலையாக முடியும், கட்சிக்காகவல்ல என்பது பின்னர் தெரிய வந்தது.

எனினும் யாழ்ப்பாண வழக்கில் அவர் எதிராளி அல்லர் என்பதால், அதில் அவர் முன்னிலையாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதை மறுத்து ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா ஒரு பகிரங்கக் கருத்து வெளிப்பாட்டை முன்வைத்தார்.

"வழக்கில் பல விடயங்களில் சுமந்திரனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரும் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார். சாட்சியாகவோ, வேறு வழியிலோ நேரடியாக தொடர்புபட்டுள்ளார். ஆகவே அந்த வழக்கில் அவர் ஒரு தரப்பு சார்பாக முன்னிலையாக முடியாது. இது ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரனுக்கு தெரியாதா?"-என்றசாரப்படநையாண்டிப்பாணியில் கருத்து வெளியிட்டிருந்தார் கே.வி. தவராஜா.

நான் சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு கேட்டேன்.

"ஆம். கே.வி.தவராஜா சொல்வது சரி. வழக்கில் என் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தால் நான் அதில் ஒரு தரப்புக்காக முன்னிலையாகக் கூடாது. முதலில் வழக்கின் விவரம் எனக்கு தெரியவில்லை. அதனால் கட்சிக்காக நான் முன்னிலையாவேன் என்று உங்கள் பத்திரிக்கைக்கு உடனடியாகக் கூறினேன். இப்போது குலநாயகம் வழக்கின் விவரங்களை என் பார்வைக்கு அனுப்பினார். அதன் பிரகாரம் கட்சி சார்பாக நான் முன்னிலையாக முடியாது" - என்றார் சுமந்திரன்.

இதுதான் அந்த 'ஃபிளாஷ்-பாக்.'

இந்த விடயத்தை வைத்துத்தான் திருகோணமலை வழக்கில், சிறீதரன் மற்றும் யோகேஸ்வரன் ஆகிய இருவருக்குமாக முன்னிலையாகும் ஜனாதிபதி சட்டத்தரணி தவராஜாவுக்கு ஆப்பு வைக்கும் கைங்கரியம் அரங்கேறி இருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு முன்னர் பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பில் பல சர்ச்சைகள் இருந்தமை வாசகர்களுக்கு தெரியும். அதில் முக்கியமானது கொழும்புக் கிளை விவகாரம். அதன் தலைவர் இதே ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாதான்.

அவர் தலைமையில் பொதுக்குழுவுக்கு பிரதிநிதிகளை தெரிவு செய்ய நடத்தப்பட்ட கொழும்புக் கிளைக் கூட்டம் சட்டப்படியானது அல்ல என்று மூன்று உறுப்பினர்கள் கட்சிக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

அவர்களில் ஒருவர் கொழும்பு கிளையின் நீண்ட கால உறுப்பினரான சின்னையா இரத்தினவடிவேல். சட்டத்தரணி கே.வி.தவராஜாவுக்கு எதிராக இவ்விடயத்தை ஒட்டி கட்சிக்கு நீண்ட பல பட்டோலைகளை சமர்ப்பித்தவர்.

அவர்தான் கடந்த தவணையில் தன்னையும் ஒரு தரப்பாக வழக்கில் சேர்க்கும்படி விண்ணப்பித்திருக்கின்றார். அவரின் சமர்ப்பணங்களில் பல இடங்களில் தவராஜாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய கடிதங்கள், ஆவணங்கள் அணைக்கப்பட்டுள்ளன.

சின்னையா இரத்தினவடிவேலை ஒரு தரப்பாக நீதிமன்றம் ஏற்கும் சாத்தியங்கள் உண்டு. அல்லது அது பற்றிய விசாரணையை நடத்தும் ஏதுக்களும் தாராளமாக உண்டு.

அப்படியான சூழலில், முன்னர் இந்த வழக்கில் பிற தரப்புகளுக்காக சுமந்திரன் ஏன் முன்னிலையாக முடியாது என்று தவராஜா கூறினாரோ, அதே காரணங்களுக்காக தவராஜாவும் முன்னிலையாக முடியாது என்ற இக்கட்டு வந்துள்ளது.

தவராஜாவின் பெயர் பல இடங்களில் குறிக்கப்பட்ட ஆவணங்களுடன் வழக்குக்குள் இரத்தினவடிவேல் நுழைந்திருக்கின்றமை தவராஜாவை வழக்குக்காக முன்னிலையாவதில் இருந்து தள்ளி வைக்கும் வேலையாக சுட்டப்படக்கூடியது.

வழக்கில் தமது சட்டத்தரணியையே 'அவுட்' ஆக்கும் சூழ்நிலை வந்ததால் சிறீதரன் குழம்புவதில் நியாயம் இருக்கத்தானே செய்யும்?

அதுதான் புதிது புதிதாக உறுப்பினர்கள் வழக்குக்குள் நுழைகின்றார்கள், அதில் சூழ்ச்சி உள்ளது என்று சிறீதரன் கரித்துக் கொட்டியிருக்கின்றார் போலும். அப்படித்தான் நான் நினைக்கிறேன். சரியோ, பிழையோ என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

## மாணவனைத் தாக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மாணவன் கடந்த 3 ஆம் திகதி பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்ற நிலையில், மாணவனின் முகத்திலும், தலையிலும் அடிகாயங்கள் காணப்பட்டதையடுத்துப் பெற்றோர் மாணவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியை தாக்கினார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மாணவனின் தந்தை அந்த ஆசிரியைக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மாணவனைத் தாக்கியதற்கான காரணம் என்ன மற்றும் காலுக்குக் கீழ் அடித்து இருக்கலாமே என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதில் அளித்த ஆசிரியை, "உங்கள் மகனுக்கு அ, ஆ தெரியவில்லை. அதனாலேயே அடித்தேன். அடிக்கும்போது அவர் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் அடிபட்டுவிட்டது" என்று கூறியதுடன், மகனுக்கு அடிக்காமல் கொஞ்சுவதா? என்றும் ஆசிரியை கேட்டிருந்தார்.

பெற்றோர் காயமடைந்த மாணவனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை வழங்கியதுடன், பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் தாக்குதல் இடம்பெற்று நான்கு நாள்களின் பின்னர் வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸாரால் நேற்று மேற்படி குறித்த ஆசிரியை கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் ஆசிரியை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்புப் பிரிவினர், வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தினர், வவுனியா வடக்கு கல்வி வலயத்தினர் ஆகியோரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியரின் ஏப்ரல் மாதக் கொடுப்பனவு 10 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படும்

அரச ஊழியர்களின் ஏப்ரல் மாதத்திற்கான கொடுப்பனவு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவில் 2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவும் உள்ளடங்கியுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு பணியாளருக்கும் கூடுதலாக 10,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

அத்துடன், ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதியமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கண்ணிவெடிகள் அற்ற நாடாக இலங்கையை மாற்றவுள்ளோம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்



2028ஆம் ஆண்டளவில் கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடிகுண்டுகள் இல்லாத நாடாக இலங்கையை மாற்றவுள்ளோம் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய கண்ணிவெடி அகற்றும் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கில் சுமார் 23 சதுரக் கிலோ மீற்றர் நிலப்பரப்பிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதன் மூலம் பொதுமக்களின் எதிர்காலப் பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# திருவிழாவில் வழங்கப்பட்ட அன்னதானத்தால் ஒவ்வாமை

## நூற்றுக்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில்

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா, நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள லக்சபான தோட்ட வாழமலை பிரிவில் தோட்ட ஆலயத் திருவிழா இடம்பெறும் வேளையில் பக்தர்களுக்கு வழங்கப்பட்ட அன்னதானம் ஒவ்வாமை காரணமாக நேற்று மாலை முதல் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் தனியார் பஸ்கள் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அதிக நோயாளிகள் வருகை காரணமாக வைத்தியசாலையில் அனைத்துப் பகுதியினரும் பணியில் ஈடுபட்டனர்.

நோயாளிகள் பலர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர் என்றும், 28 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணீர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மொட்டுக் கட்சி சார்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது ஊடகவியலாளர்கள் வினவிய கேள்விகளுக்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

கேள்வி:- உங்களின் தாய்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. உங்களின் அரசியல் அந்தக் கட்சியில் இருந்தே ஆரம்பமானது. ஆகவே, கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. பிரச்சினைகளுக்குப் பேச்சுகள் ஊடாக வெகுவிரைவில் தீர்வு காணப்பட வேண்டும்.

கேள்வி:- உங்களின் பங்காளிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளார்களே... அது உங்களுக்குச் சவாலாக அமையாதா?

பதில்:- சவால் ஏதுமில்லை. தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அரசியல் கூட்டணிகள் ஸ்தாபிக்கப்படுவது இயல்பானதே.

கேள்வி:- ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளாரே?

பதில்:- அது அவரது நிலைப்பாடு. நாங்கள் எமது கட்சியின் வேட்பாளரை அறிவிப்போம். கட்சியின் நிறைவேற்று சபை ஊடாக சிறந்த தீர்மானத்தை எடுப்போம். மிகச் சிறந்த வேட்பாளரைக் களமிறக்குவோம்.

கேள்வி:- நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப் போகின்றீர்களா?

பதில்:- ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் உள்ளது.

கேள்வி:- புத்தாண்டு தொடர்பில் மக்களுக்கு ஏதேனும் குறிப்பிட விரும்புகின்றீர்களா?

பதில்:- அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். மகிழ்வுடன் புத்தாண்டைக் கொண்டாட வேண்டும்.

## திருமலை வீரகத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. இவ்விடத்திலேயே தற்போது பாரிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு புத்தர் சிலை நிறுவப்பட்டது.

இதுபோன்ற பௌத்தமயமாக்கலின் மூலம் தமிழர் பகுதிகளில் உள்ள தமிழர்களுடைய காணிகள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு சிங்களமயமாக்கப்பட்டு வருகின்றன என்றும், சிறிய புத்தர் சிலை வைப்பதில் தொடங்கி அது விகாரையாக மாற்றப்பட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் வரையிலான செயற்பாட்டை அரச அனுசரணையுடன் சிலர் செய்து வருகின்றனர் என்றும், இதற்கு அதனுடன் சம்பந்தப்பட்ட அரச நிர்வாகமும் துணைபோகின்றது என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது அழகல்ல...!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்சி நிலைமை குறித்து ஊடகவியலாளரைக் கூட்டிக் கவலை தெரிவித்திருக்கின்றார். மனவிரத்தியுடன் - சலிப்புடன் - மனக்குமுறலைக் கொட்டியிருக்கின்றார். கட்சிக்குள் அரசியல் சூழ்ச்சிகளும் குழிபறிப்புகளும் நடப்பதை ஆதங்கத்துடன் அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அவரது கருத்து வெளிப்பாடு ஒரு புறத்தில் புரிந்து கொள்ளத்தக்கதாயினும், அவர் இறங்கியிருக்கும் அரசியலுக்கு - அவர் தேர்ந்தெடுத்திருக்கும் அதன் பாதைக்கு - அவர் கூறும் விடயம் புதியதல்ல.

தந்தை செல்வா போன்றோர் பயணித்த நேர்சீர் தடம் கொண்ட ஓர் அரசியல் பாதையில் தந்தை தோற்றுவித்த தமிழரசுக் கட்சியும் இப்போது இல்லை, அதில் 14 வருடங்களுக்கு முன்னர் வந்து சேர்ந்த சிறீதரன், சுமந்திரன் போன்ற தலைவர்களும் இல்லை. அதுதான் உண்மை.

தேர்தல் அரசியல் என்று வந்துவிட்டாலே சூழ்ச்சியும், சூதுவாதும் தவிர்க்க முடியாதவை. ஏன் தமிழரசுத் தலைவர் தெரிவில் கூட அது எவ்வளவு தூரம் ஆழ ஊடுருவி இருந்தது என்பது வெற்றி பெற்ற சிறீதரனுக்குத் தெரியாதா என்ன?

சூழ்ச்சிகளும், கால்வாரல்களும், இடக்குப் போடல்களும், முடக்குப்படுதலும் இந்த அரசியலில் தவிர்க்க முடியாத சகஜம்தான். சிறீதரன் எம்.பி. உள்ளிட்ட இப்போதைய அரசியல் தலைவர்கள் பலரும் தமக்கு வரித்துக் கொண்ட பாதையே அதுதான். அப்படி இருக்கையில் அது குறித்து இவ்வளவு விரைவாக சிறீதரன் சலித்துக் கொள்வது வியப்பானது.

சிறீதரன் தமிழரசுக் கட்சிக்குள் வந்தமையையும், முதல் தடவையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் நியமனம் பெற பயணித்த வழியையும் ஆராயப் புறப்பட்டாலே அவர் தாம் பயணிக்கப் போகின்ற அரசியலின் பாதை யாது என்பதை நன்கு தெரிந்துதான் அதில் காலை வைத்திருக்கின்றார் என்பதை எவரும் புரிந்து கொள்வர். அப்படி இருக்கையில் அதை அவர் சலிப்போடு விமர்சிப்பது எதிர்பாராதது. ஆச்சரியம் தருவது.

சரியோ, பிழையோ கட்சியின் மூத்த தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றோரின் அரசியல் பாதை நீண்டது. அதிலும் குறிப்பாக மாவை சேனாதிராஜாவின் பட்டறிவு விசாலமானது. ஏற்ற - இறக்கங்களையும், உயர்வு - தாழ்வுகளையும், பயங்கரமான - மோசமான - அனுபவங்களையும் கொண்டது அது. அவற்றை எல்லாம் எதிர்கொண்டு தாண்டி வந்தவர் மாவை. கட்சித் தொண்டனாகப் பணியாற்றித் தொடர்ச்சியாக 40 வருடங்களுக்கு மேல் கட்சிக்கு உழைத்த பின்னர்தான் அவர் தலைவரானார். வெறுமனே 14 வருடங்கள் வாய்ச்சவடால் அரசியல் செய்து விட்டு அவர் தலைவர் ஆகிவிடவில்லை.

இப்போது அவருடைய இயங்கு நிலை, செயற்பாடுகள், போக்குகள் போன்றவை விமர்சனத்திற்கு உரியவையாக இருந்தாலும், தமிழரசுத் தலைவர் கதிரைக்கு வருவதற்கு அவர் தாண்டி வந்த படிகள் - அனுபவங்கள் - பட்டறிவுகள் - சொல்லிமாளாதவை. அவர் கூட எச்சந்தர்ப்பத்திலும் கட்சி நிலைமை குறித்து இப்படிப் பகிரங்கமாக சலித்துக் கொண்டவர் அல்லர். சூழ்ச்சி என்று திட்டியவர் அல்லர்.

இடையில் சுமார் இரண்டு தசாப்த காலம் தமிழர் பிரதேசத்தில் கடும் யுத்தம் நடைபெற்றமையால் ஜனநாயக அரசியலுக்கு வாய்ப்பே இருக்கவில்லை. அதனால் மூத்த ஜனநாயகக் கட்சியான தமிழரசுக் கட்சியில் தலைமைத்துவ இடைவெளி - அனுபவமும் முதிர்ச்சியும் தகைமையும் கொண்ட அரசியல் தலைவர்களுக்கான தலைமைத்துவ இடைவெளி - உருவாகி உள்ளது என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

அந்த இடைவெளியைப் பயன்படுத்தி தலைமைத்துவத்துக்குப் பாய்ந்து உயர விரும்புபவர்கள் கொஞ்சம் தலைமைத்துவத் தகுதியையும் முதிர்ச்சியையும் வெளிப்படுத்த வேண்டும். அரசியல் சூழ்ச்சியென்று புதிய விடயத்தை காட்டுவது போல விடயங்களை முன்னிலைப்படுத்தி, பச்சாதாபம் மூலம் ஆதரவைச் சுருட்டும் மூன்றாம் தர அரசியலில் இறங்குவது அபத்தம்.

கட்சியில் தலைவர் தேர்தல் முடிந்ததும் தாமதிக்காமல் தலைமைப் பதவியை பொறுப்பேற்றுச் செயற்படுங்கள், இழுத்தடிக்காதீர்கள் என்றுதானே சிறீதரனுக்கு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுமந்திரன் மீண்டும் மீண்டும் அழுத்தமும் வலியுறுத்தலும் தந்து வந்தார்.

சுமார் ஒரு மாதத்திற்கு பின்னர்தானே தடை உத்தரவு கோரும் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கலாகி இவ்வளவு இக்கட்டுகளும் கட்டவிழ்ந்தன?

சுமந்திரன் கூறிய போது அதைச் செய்யாமல் உதாசீனப்படுத்தி விட்டு, இப்போது தலைமைப் பொறுப்பை ஏற்க முடியாமல் போனமையால் ஏற்பட்ட சலிப்பால், அரசியல் சூழ்ச்சி, அது, இது என்று பிரலாபிப்பது ஒரு கட்சிக்கு தலைமை தாங்கப் போகின்றவருக்கு அழகல்ல.

# லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் இரு விமானங்கள் மோதி விபத்து



லண்டனில் அமைந்துள்ள ஹீத்ரு விமான நிலையத்தில் ஏற்பட்ட விபத்து காரணமாக பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அதிக பயணிகளை கொண்டு இயங்கும் இந்த விமான நிலையத்தின் 3 ஆவது டெர்மினல் பகுதியில் விபத்த இடம்பெற்றுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெறியிட்டள்ளன.

இந்த நிலையில், வெர்ஜின் அட்லாண்டிக் போயிங் 787-9 ரக விமானம் பயணிகளை தரையிரங்கியுள்ளது.

அப்போது அதே ஓடுபாதையில் வந்திறங்கிய மற்றொரு விமானத்தின் இறக்கை பகுதி மோதியுள்ளது.

இதில் இரு விமானங்களின் இறக்கைகளும் சேதமடைந்துள்ளன.

எனினும், விபத்தில் அதிர்ஷ்டவசமாக பயணிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என விமான நிலையம் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# பிரித்தானியாவில் சீரற்ற வானிலை; பல விமான சேவைகள் இரத்து







பிரித்தானியாவில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

“கத்லீன்” புயலுடன் கூடிய பலத்த காற்று மற்றும் வெப்பமான காலநிலை காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கை அறிவிப்புகளின் பிரகாரம் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப் படுகின்றது.

அதன்படி, பிரித்தானியாவில் சுமார் 140 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசமான வானிலையால் ஸ்கொட்லாந்தில் ரயில் மற்றும் படகு சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என குறிப் பிடப்பட்டுள்ளது.

காற்றின் நிலை காரணமாக, பிரித்தானியாவின் வடமேற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகள் மற்றும் வடக்கு அயர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

# காசாவின் மிகப்பெரிய வைத்தியசாலை முழுமையாக அழித்தது இஸ்ரேல்







காசாவின் அல்-ஷிஃபா மருத்துவமனை முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அல்-ஷிஃபா மருத்துவமனை காஸா பகுதியில் செயல்பட்டு வந்த மிகப்பெரிய மருத்துவமனை ஆகும்.

இந்த மருத்துவமனை தற்போது முழுமையாக அழிக் கப்பட்டுவிட்டதாகவும், அங்கு முற்றிலும் சிதைக்கப்பட்ட 5 சடலங்கள் இருந்தன எனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமாஸுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் இராணுவம், அல்-ஷிஃபா மருத்துவமனையில், தீவிரவாதி கள் தங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அங்கு தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அதன்பின்னர் அந்த இடத்தைப் பார்வையிட்ட உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுக் குழு, மருத்துவமனை முற்றிலும் சேதமடைந்திருப்பதாக தெரிவித்துள்ளது.

# 60 ஆண்டுகளில் அடையாத வளர்ச்சியை 10 ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ளது

## பிரதமர் மோடி தெரிவிப்பு



"சுதந்திரத்துக்குப் பின் 60 ஆண்டுகளில் அடையாத வளர்ச்சியை கடந்த 10 ஆண்டுகளில் நாடு அடைந்துள்ளது."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிஹார் மாநிலம் நவாடாவில் இடம்பெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டில் இருந்து வறுமையை விரட்டுவதற்காகவே நான் இங்கே நிற்கிறேன். கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு முந்தைய நாட்டின் நிலைமையை என்னால் மறக்க முடியாது. நாட்டின் சாமானிய மக்களில் பலர் குடிசை வீடுகளில் இருந்தனர் அல்லது வீடில்லாமல் இருந்தனர். ஏழைகள் சமையல் எரிவாயு இணைப்பு இல்லாமல் இருந்தனர். ஏழைகளுக்கு வழங்கப்பட்ட ரேஷனில் இடைத்தரகர்கள் பயனடைந்தனர். நான் வறுமையில் வாழ்ந்திருக்கிறேன். இந்த ஏழை மகன், ஏழைகளின் சேவகன். சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளில் எட்டாத வளர்ச்சியை இந்த பத்தாண்டுகளில் நாடு அடைந்துள்ளது.

இதுதான் சரியான நேரம், இந்தியாவுக்கான நேரம் வந்துவிட்டது, நாம் இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது என்று செங்கோட்டையில் இருந்து நான் சொன்னேன். 2024 ஆம் ஆண்டுத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் நலனுக்காக பிஹார் மக்கள் முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளனர்.

இன்று இந்தியாவிலும், பிஹாரிலும் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்பட்டுள்ளன. இன்று பிஹாரில் விரைவு வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ரயில் நிலையங்கள் நவீனபடுத்தப்படுகின்றன. வந்தேபாரத் போன்ற ரயில்கள் அதிகரித்துள்ளன." – என்றார் .

# இலங்கைக்கு வெங்காயத்தை விநியோகிக்க இந்தியா திட்டம்



இலங்கைக்கு ஆயிரக்கணக்கான மெட்ரிக் தொன் வெங்காயத்தை விநியோகிக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மோடி அரசின் 'அண்டை நாடுகளுக்கு முதலிடம்' என்ற வெளியுறவுக் கொள்கையின் கீழ், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டுச் சந்தையில் அதிக அளவில் வெங்காயம் கையிருப்பை வைக்கவும் நோக்கமாக கொண்டு இந்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக நடிகர் பவர் ஸ்டார் மதுரையில் பிரச்சாரம்



மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் சரவணன் வெற்றிபெற்றால் ஏழை மக்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்ப்பார் என்று கூறி மதுரையில் நடிகர் 'பவர் ஸ்டார்' சீனிவாசன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

மதுரை மக்களவை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் மருத்துவர் சரவணனை ஆதரித்து அக்கட்சி ஆதரவு நடிகர், நடிகைகள் ஏராளமானோர் மதுரையில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

அந்த வரிசையில் இன்று திரைப்பட நடிகர் 'பவர் ஸ்டார்' சீனிவாசன் பிரச்சாரம் செய்தார். அவர் மதுரை எம்.ஜி.ஆர். பஸ் நிலையம், மாட்டுத்தாவணி பகுதியில் கடைகள், பொது இடங்களில் பொதுமக்களிடம் வேட்பாளர் சரவணனுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

அப்போது பொதுமக்கள் பலரும் அவருடன் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். காய்கறிகடை, பழக்கடைகளில் வியாபாரிகளிடம் அ.தி.மு.கவுக்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மதுரை என்னுடைய சொந்த ஊர். ஆனால், இதுவரை யாருக்காகவும் மதுரைக்கு பிரச்சாரத்துக்கு வந்ததில்லை. எனது உடன்பிறவா சகோதரரான அ.தி.மு.க. வேட்பாளர் சரவணனுக்காக முதல் முதல் முறையாக பிரச்சாரம் மேற்கொள்ள வந்தேன்.

இம்முறை மருத்துவர் சரவணன் உறுதியாக வெற்றி பெறுவார். படித்தவர், மருத்துவர், சொந்த ஊர்க்காரர் என்பதால் நிச்சயமாக வெற்றி அடைவார். தொடர்ந்து ஏழை மக்களுக்கு நல்லது செய்வார். அவர் வென்றால் எய்ம்ஸ் மருத்துவமனை வர முயற்சி எடுப்பார். இலவசமாக மக்களுக்கு மருத்துவம் பார்ப்பார். எனவே, ஏழை, எளிய மக்கள், கண்ணை மூடிக் கொண்டு அவருக்கு வாக்களிக்கலாம்." – என்றார்.

# புது வருடத்தை முன்னிட்டு மேலதிகமாக 700 பஸ்கள்



தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மேலதிகமாக 700 பஸ்கள் இயக்கப்படவுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த பஸ் சேவைகள் கிராமங்களுக்கும் இயக்கப் படவுள்ளன என அந்த ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில், அதிக விலைக்கு உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் உணவகங் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கொழும்பு மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி கீதிகா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய புறநகர் பகுதிகளுக்கு அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பய ணிகள் வருகை தருகின்றனர்.

இதன் காரணமாக கொழும்பில் உள்ள உணவகங்க ளில் சுகாதாரப் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன எனக் கொழும்பு மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி கீதிகா ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

### இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கார்த்திகைப் பூ அலங்காரம்:

# உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமையவே பாடசாலை மாணவர்களை அழைத்து விசாரித்தோம்

## மனித உரிமை ஆணைக்குழு தெல்லிப்பழை பொலிஸார் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

பொலிஸ் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமை யவே பாடசாலை மாணவர்களைப் பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணைகளை முன்னெடுத்தோம் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கார்த்திகைப் பூ அலங்காரம் செய்யப்பட்டமை தொடர்பில், மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தின ரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமை தொடர்பில் ஆசிரியர் சங்கத்தினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப் பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலி ஸாரின் வாக்குமூலத்தைப் பெறுவதற்காகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கடந்த வெள்ளிக் கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந் திய அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுத்திருந்தது.

அதன் பிரகாரம் முன்னிலையான பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவர், பொறுப்பதிகாரி விடுமுறையில் உள்ளார் என்று கூறி சம்பவம் தொடர்பான வாக்குமூலம் வழங்கி னார். அதன்போது தமக்குப் பொலிஸ் உயர் அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரமே மாணவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணை செய் தோம் என்று தெரிவித்தார்.

வாக்குமூலங்களைப் பதிவு செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர், அதன் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக் கின்றார்.





# ஓமந்தையில் ரயிலுடன் பிக்கப் மோதிய விபத்தில் படுகாயமடைந்தவர் மரணம்!




(வவுனியா நிருபர்)

வவுனியா - ஓமந்தை, பன்றிகெய்தகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் ரயிலுடன் பிக்கப் ரக வாகனம் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனியாயூடாக யாழ்ப்பாணம் நோக்கி ரயில் பயணித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஓமந்தை - பன்றிகெய்த குளம் பகுதியில் ரயில் கடவையைக் கடக்க முயன்ற பிக்கப் ரக வாகனம் ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பிக்கப் ரக வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

மன்னார், நானாட்டன் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ராஜன் நிரோஜன் என்பரே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபத்துச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மதுபான நிலையங்களுக்கு பூட்டு




தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் நாட்டின் சகல மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படவுள்ளன.

மதுவரித் திணைக்களம் அறிக்கை ஒன்றை விடுத்து இதனைத் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 3 நட்சத்திர விடுதிகள் மற்றும் அதற்கு மேற்பட்ட விருந்தகங்களில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களை மாத்திரம் திறக்க முடியும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் மதுவரித் திணைக்களத்தின் செயற்பாட்டு பிரிவுக்கும் அந்த திணைக்களத்தின் 1913 என்ற துரித இலக்கத்திற்கும் அறிவிக்க முடியும் என மதுவரி திணைக்களத்தின் பேச்சாளர் சன்ன வீரக்கொடி தெரிவித்துள்ளார்.





# வடக்கு அமைச்சருக்கு நேர்ந்த கதி கிழக்கு அமைச்சர்களுக்கும் நடக்கும்

## ஹேஸ்யம் கூறுகின்றார் சாணக்கியன் எம்.பி.

வடக்கில் அமைச்சருக்கு நேற்று நடந்த அதே நிலை கிழக்கிலும் உள்ள அமைச்சர்களுக்கும் நடக்கும் என்று மட்டக்களப்பு மாவட்டத்தின் இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட திக்கோடை கிராமத்தில் நேசக்கரங்கள் சமூக நல அமைப்பின் சாதனையாளர் பாராட்டு விழா அறிவொளி கல்வி நிலையத்தில்,நேச கரங்கள் அமைப்பின் தலைவர் ந. கதிரவன் தலைமையில் நேற்று மூன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட சமயமே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கூறினார்.

“தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழரசுக் கட்சி போராடும். மக்களின் வரிப்பணத்தில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள், மக்களுக்குத் திருப்தி அளிக்காதவிடத்து வடக்கில் அமைச்சருக்கு நேற்று நடந்த அதே நிலை கிழக்கிலும் உள்ள அமைச்சர்களுக்கும் நடக்கும். மக்களால் இவர்களும் வெகுவிரைவில் துரத்தியடிக்கப்படுவார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக தமிழ் மக்கள் காணப்படுவார்கள்.” – என்று நிகழ்வில் உரையாற்றிய இரா. “சாணக்கியன் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் சாதனையாளர்களுக்கான நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.











# ஓய்வுபெற்ற படையினருக்காக மேலும் பல நலத் திட்டங்கள்!

## அரசாங்கம் தயாராக உள்ளது என்கின்றார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த





“ஓய்வுபெற்ற போர்வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நல னுக்கான மேலும் திட்டங்களை நடை முறைப்படுத்த அரசு தயாராக உள்ளது.” – என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

சேவையில் இருந்து ஓய்வுபெற்ற மற்றும் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வுபெற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் பங்குபற்றும் நிகழ்வு ஒன்று வன்னி பாதுகாப்புப் படையினரால் நேற்று முன்தினம் இராணுவத்தின் கஜபா படைப்பிரி வின் ரெஜிமென்ட் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அவர்களின் நலன் மற்றும் நிர்வாக ரீதியாக அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல் நிலைகள் குறித்து கேட்டறிந்து, அவைகளை நிவர்த்தி செய்வதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம்.

இந்நிகழ்வில் பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அவரை வன்னி பாதுகாப்பு படை தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார வரவேற்றார்.

இராணுவத் தலைமையகத்தின் ஏழு வெவ்வேறு பணிப்பாளர்களின் கீழ் உதவி மையங்கள் நிறுவப்பட்டன. இது போர் வீரர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் தேவைகளை முன்வைத்து அதற்கு தீர்வு காண வசதியாக இருந்ததமை குறிப்பிடத் தக்கது.

இதன்போது உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தத் தின் போது உயிர் தியாகம் செய்த படை வீரர்களை நினைவு கூர்ந்தமையுடன், அவர்கள் தேசத்திற்காக ஆற்றிய சேவைகளையும் பாராட்டினார்.

முப்படையினரால் தற்போது நடை முறைப்படுத்தப்பட்டு வரும் நலத் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங் கள் குறித்து அவர் இதன்போது எடுத் துரைத்தார்.

நாட்டிற்காகவும், தேசத்திற்காகவும் பல தியாகம் செய்தவர்களின் நலனை நாம் உறுதிப்படுத்துவது இன்றிய மையாததாகும். அத்துடன் பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள், ரணவிரு சேவா அதிகாரசபை என்பன இணைந்து ஏனைய பொது நிர்வாக முகவர்களுடன் சேர்ந்து சுகாதாரம், பொதுநிர்வாகம், வங்கி மற்றும் இதர சேவைகளின் உதவிகளை கோரும் போது போர் வீரர்களின் குடும்ப உறுப்பினர்க ளுக்கு முன்னுரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், தற்போது நடைமுறை யில் உள்ள “உறுமய” காணி உறுதி வழங்கும் திட்டத்தின் கீழ் போர்வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பி னர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பங்குபற்றியோர் நேரடி யாகத் தங்களின் பிரச்சினைகளை முன்வைக்கவும், கருத்துத் தெரி விக்கவும் நிகழ்வில் வாய்ப்பு அளிக் கப்பட்டது.

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) நிஷாந்த மானகே, சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், பெருந்திரளான போர் வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மூவர் சஜித் கட்சியில் தேர்தல் களத்தில்?

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை மையப்படுத்தி அரசி யல் கட்சிகள் தர்தமது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றன.

இருப்பை தக்கவைப்பதற்காக பல்வேறு மட்டத்தில் அரசியல் கூட்டணி கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதேபோன்று மக்களின் வாக்கு வங்கியை பெறுவதற்கான முயற்சி களும் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

அந்த வகையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கை கிரிக்கெட் அணி யின் முன்னாள் வீரர்கள் மூவர் கள மிறங்கவுள்ளனர் எனத் தெரியவரு கிறது.

இந்த மூவரும் ஐக்கிய மக்கள் சக் தியுடன் இணைந்து அரசியல் பய ணத்தைத் தொடரவுள்ளனர் என கட்சி யின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன எனவும், அவர்கள் யார் என்பது குறித்து விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு களமிறங்கும் மூவரில் ஒருவர் பிரபல வேகப்பந்து வீச்சாளர் எனவும், பல்வேறு சர்வதேச சாதனை களை புரிந்தவர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர் கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தி களமிறங்குவது குறித்து ஆலோசித்து வருகிறார் எனத் தெரிய வருகிறது.

# கல்முனை வடக்குப் பிரதேசம் பறிபோகுமானால் தமிழ்த் தேச வரைபடத்தில் அம்பாறை இருக்காது

## போராட்டக் களத்தில் சட்டத்தரணி சுகாஷ் எச்சரிக்கை









(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்குப் பிரதேசம் பறி போகுமாயின் கிழக்கில் தமிழரின் இருப்பு கேள்விக்குறியாகப் போய் விடும். தமிழ்த் தேச வரைபடத்தில் இருந்து அம்பாறை நீக்கப்படும். ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியான நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொது மக்கள் 14 ஆவது நாளாக நேற்று கவனவீர்ப்புப் பேரணியுடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அங்கு விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் 34 வருடங்களாக ஒரு சுயாதீனமான பிரதேச செயலகமாக இயங்கி வருகின்றது. ஆனால் இங்கு ஒரு தனியான பிரதேச செயலாளர் என்று ஒருவர் இல்லை. இது இலங்கையின் ஆச்சரியங்களில் ஒன்று. கணக்காளர் என்ற ஒருவர் இல்லை. கல்முனை தெற்குப் பிரதேச செயலாளரின் எதேச்சையான அதிகாரத்தினுள், சட்டவிரோத உத்தரவிற்கு கட்டுப்பட்டுத் தான் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது அரச எதேச்சாதிகாரமாகும்.

இது அரச பயங்கரவாதம். 1993. 07.23 ஆம் திகதி இலங்கை அமைச்சரவையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் , ஒரு சுயாதீனமாக இயங்குகின்ற பிரதேச செயலகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சரவை தீர்மானத்தை மீறி இந்த அரசானது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அரசாங்கம் செயற்பட்டு கொண்டிருக்கின்றது. கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செயற்பட்டு கொண்டிருக்கின்றார். இது சட்டத்தை மீறிய செயற்பாடாகும். ஓர் அமைச்சரவைத் தீர்மானத்தை மீறி எவ்வாறு கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செயற்பட முடியும்? இதை நாம் அனுமதிப்போமாயின் தமிழ்த் தேச வரைபடத்தில் இருந்து கல்முனை வடக்கு அகற்றப்படும்.

தமிழர் தாயகத்தில் இருந்து கல்முனை வடக்கு பறி போகப் போகின்றது.இது தான் அவர்களது சூழ்ச்சி. இதுதான் அவர்களது நிகழ்ச்சி நிரல். இந்தச் சதிக்கு எதிராகத்தான் இந்த மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். 14 நரிகளாக இந்த மக்கள் போராடி வருகின்றார்கள். இவர்களுக்கு இந்த நீதி கிடைக்கும் வரை மக்களோடு சேர்ந்து நாமும் போராடுவோம். இது வெறுமனே கல்முனை வடக்கின் பிரச்சினை மாத்திரம் அல்ல. தமிழ்த் தேசத்தின் பிரச்சினை. கல்முனை வடக்கிற்கு நீதி கேட்டு தமிழ்த் தேசம் திரள வேண்டும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை மக்கள் திரண்டு போராட வேண்டும். கல்முனை வடக்குப் பிரதேசமானது பறிபோகுமாயின் கிழக்கு இருப்பு கேள்விக்குறியாகப் போய் விடும். அம்பாறை தமிழ் தேச வரைபடத்தில் இருந்து நீக்கப்படும்.

ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும். நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள். அந்த வழக்கினை மீறி கல்முனை வடக்குப் பிரதேச செயகத்தை உப பிரதேச செயலகம் எனக் கூறி கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. வழக்கினை தாக்கல் செய்தவர்கள்(தமிழ் தேசிய கூட்டமைப்பினர்)பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏன் திருகோணமலையில் நீதிமன்ற அவமதிப்பு என்று வழக்கு தாக்கல் செய்த உங்களுக்கு இங்கு இவ்வாறு வழக்குத் தாக்கல் ஒன்றினை நீதிமன்ற அவமதிப்பு என்று மேற்கொள்ள முடியாதா? முடியும். ஆனால் எங்களது தலைவர்கள் கல்முனை வடக்கை சிங்கள - பௌத்த பேரினவாதத்துடனும் சில அரசியல் தலைவர்களிடமும் விற்றுவிட்டார்கள்.

இதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. கல்முனை வடக்கிற்கு நீதி கிடைக்கின்ற வரை நாங்கள் போராடுவோம். எங்களது கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். கல்முனை தெற்கு பிரதேச செயலாளரது அதிகாரங்கள் எமது பிரதேச செயலக எல்லையினுள் நிறுத்தப்பட வேண்டும். நிறுத்தப்படுகின்ற வரை எமது போராட்டம் தொடரும். கல்முனை வடக்கானது தமிழ் தேசத்தின் ஒரு பகுதி என்பதை மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இங்கு இடம்பெறுகின்ற அநீதிகளுக்கு எதிராக தமிழ்த் தேசமாக நாங்கள் போராடுவோம். நீதி கிடைக்கின்ற வரை எமது குரல்கள் ஓயப் போவது கிடையாது. - என மேலும் குறிப்பிட்டார்.

மேலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 14 ஆவது நாளாக நேற்றும் கவனவீர்ப்புப் பேரணியுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



# ரணில் - சஜித் - அநுரகுமார மூவருக்கும் நேரடி விவாதத்துக்கு வருமாறு அழைப்பு

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க விரும்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோரை தேர்தலை ஒட்டிய நேரடி விவாதத்திற்கு வருமாறு டெய்லி மிரர் செய்திச் சேவை அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நிச்சயமாக களமிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான உறுதிமொழிகள் குறித்து கேட்டறிவதற்காக ரணில், சஜித் மற்றும் அநுரவிற்கு நேரடி விவாதத்திற்கு டெய்லி மிரர் செய்திச் சேவை அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நேர்காணல் டெய்லி மிரர், லங்காதீப, தமிழ் மிரர் மற்றும் சண்டே டைம்ஸ் டிஜிட்டல் தளங்களில் நேரடியாக ஒளிபரப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் தலைவர்கள் மூவரையும் விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு கோரும் முறையான அழைப்பிதழ் விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவாதம் நடத்துவதற்கான திகதி மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாட்டின் சிறைச்சாலைகளில் 50 கைதிகள் உயிரிழந்தனர்

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் சிறைச்சாலைகளில் 50 கைதிகள் உயிரிழந்துள்ளனர்.

தவறான முடிவு, சுகவீனம் மற்றும் தாக்குதல்கள் என்பனவற்றால் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி .திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் 6 பெண் கைதிகளும் அடங்குகின்றனர்.

இவர்களில் 03 வெளிநாட்டு கைதிகளும் உள்ளடங்குகின்றனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் சிறைச்சாலைகளுக்குள் 209 பேர் உயிரிழந்துள்ளனர் என அவர் கூறியுள்ளார்.



# மலைநாட்டு நடனத்தை பாதுகாக்க ஜனாதிபதியினால் குழு நியமனம்





மலைநாட்டு நடனக் கலையைப் பாதுகாத்து, தொடர்ந்து பேணுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்படும் இந்தக் குழுவில் கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக் கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் மலைநாட்டு கலை மையமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று கண்டி பாரம்பரிய நடன கலைஞர்களைச் சந்தித்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கண்டியின் பாரம்பரிய நடனக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து ஆராயுமாறும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிகிரமசிங்க ஆலோசனை வழங்கினார்.

மலைநாட்டு நடனக்கலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபல்யமடைந்துள்ள போதிலும் பாரம்பரிய மரபுகளை பின்பற்றாமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, புதிய குழு அதனை ஆராய்ந்து பொருத்தமான முறையைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சப்ரகமுவ நடனம் போன்ற இந்த நாட்டின் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றி அனைத்து மக்களுக்கும் நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கு கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்கள் தமது பாராட்டைத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில், அமைச்சர் மனுஷ நாணயக்கார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# யாழ். பெருமாள் கோவிலின் கும்பாபிஷேக மலர் வெளியீடு

வரலாற்றுச்சிறப்புமிக்க வண்ணை ஸ்ரீவேங்கட வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் குடமுழுக்கு கும்பாபிஷேக பெருவிழாவின் மலர்வெளியீட்டு நிகழ்வு நேற்று தேவஸ்தானத்தின் உட்பிரகாரத்தில் உள்ள மஹாலட்சுமி சந்நிதியில் நடைபெற்றது...

குடமுழுக்கு கும்பாபிஷேக பெருவிழாவை ஒட்டிய இந்நிகழ்வு தேவஸ்தான தலைவர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா கலந்துகொண்டு மலரை வெளியீட்டு வைத்தார். திரு.லிங்கம் தம்பதியினர் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாவது மலரை தேவஸ்தானத்தின் தலைவர் தி.சிவரூபன் வெளியீட துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா பெற்றுக்கொண்டார்.

ஏனைய பிரதிகள் சம்பிரதாயபூர்வமாகப் பக்தர்களுக்கு கையளிக்கப்பட்டன.

இவ் நிகழ்வில் தேவஸ்தான பிரதம குரு செ.ரமணிதரக் குருக்கள், தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினர்கள், பக்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்..

வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜப் பெருமாள் தேவஸ் தானத்தின் கும்பாபிஷேக பெருவிழா கடந்த மார்ச் 24 ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளுவது எப்படி? மட்டக்களப்பில் ‘மக்கள் மனு’வின் கருத்தாய்வு

ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்னும் தலைப்பில் கருத்தாய்வுகளை முன்னெடுத்துவரும் வடக்கு – கிழக்கு சிவில் சமூகக் குழுவான “மக்கள் மனு” அமைப்பின் இரண்டாவது மக்கள் சந்திப்பு, நேற்று முன்தினம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதையொட்டி அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பிரதிநித்துவப்படுத்தும், கிழக்கு மாகாணத்தின் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்டத் தலைவர்கள் பலர் பங்கு பற்றியிருந்தனர். நிகழ்வில், பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் யதீந்திரா மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் வணபிதா அகஸ்டின் நவரெட்ணம் ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் செயலாளர் நாயகமுமான கோவிந்தம் கருணாகரம், தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிரேஷ்ட தலைவர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் மற்றும் அரியநேந்திரன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதித் தலைவர் துரைரட்ணம் ஆகியோரும் பங்கு கொண்டு, தங்களின் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

நிகழ்வில் கருத்துரைத்த, இலங்கைத் தமிழரசு கட்சியின் கிழக்கு மாகாண சிரேஷ்ட தலைவர்களின் ஒருவரான, சிறிநேசன், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான மக்கள் மனு சிவில் சமூகத்தின் பரிந்துரையை ஆதரித்தமையுடன், தமது கட்சி இதனை சரியானதொரு ஆலோசனையாக கருதுவதாகவும் தெரிவித்திருந்தார்.

“நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப் பட்டுக் கொண்டிருக்கின்றோம். 2015 இல், நாங்கள் நம்பிக்கையுடன் ஆதரவளித்த மைத்திரிபால சிறிசேனவும் எங்களை ஏமாற்றினார், தான் வெற்றி பெறாது போயிருந்தால், ஆறடி நிலத்திற்குள் புதைந்து போயிருப்பேன் என்று கூறியவர், பின்னர் மகஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமாராக்கினார் – மீண்டும் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். இவ்வாறு நாங்கள் தொடர்ந்தும் ஏமாந்து கொண்டிருக்க முடியாது.

“இன்று புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்களும் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றின் அவசியம் தொடர்பில் பேசி வருகின்றனர். ஆனால் அவ்வாறானதொரு வாக்கெடுப்பை இலங்கையில் நாம் நடத்த முடியாது, அரசாங்கம் அதனை அனுமதிக்காது. ஆனால் இந்த ஜனாதிபதி தேர்தலை நாம் அதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இலங்கைக்கும், சர்வதேச சமூகத்திற்கும் எங்களுடைய மக்களின் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

“அந்த வகையில், “மக்கள் மனு“ – வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தின் தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனையை நான் வரவேற்கின்றேன். இதனை எமது கட்சி ஆதரிகின்றது. ஆனால் இதிலுள்ள சிக்கல்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் நிறுத்தும் தமிழ் பொது வேட்பாளர் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெறக் கூடியவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்களுடைய நிலைப்பாட்டை மக்கள் ஆதரிக்கவில்லை என்னும் முடிவு கிடைத்து விடும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த முயற்சியை முன்னெடுக்க வேண்டும்” – என்று தெரிவித்தார்.

நிகழ்வில் பேசியிருந்த – ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தம் கருணாகரன் –

“ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை வேட்பாளர்கள் அனைவரையும் நாம் அறிவோம். ரணில் எப்படியானவர், அநுரகுமார திஸநாயக்க எப்படியானவர், அதே போன்று, சஜித் பிரேமதாஸ எப்படியானவர், அவருக்குள் என்ன இருக்கும் – என்பவையெல்லாம் நாமறிவோம்.

கடந்த காலத்தில் இவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் எப்படியான நிலைப்பாடுகளை எடுத்திருந்தனர் என்பதும், எங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. எனவே இவர்களை மீண்டும் நம்பி வாக்களிக்க முடியாது. இந்த நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, தமிழ் மக்களின் ஆணையை உலகறியச் செய்ய வேண்டியது நம் அனைவரதும் தமிழ் தேசியப் பணியாகும். தமிழ் தேசியத்தை அடுத்த தறைமுறையிடம் நாம் ஒப்படைக்க வேண்டும்.

இதற்கு முன்னரும் சிலர் போட்டியிட்டிருக்கின்றனர். குமார் பொன்னம்பலம் போட்டியிட்டிருக்கின்றார். சிவாஜிலிங்கம் போட்டியிட்டிருகின்றார். அவர்கள் எவருமே தமிழ்ப்பொது வேட்பாளர்கள் அல்லர். அவர்கள் தமிழ் வேட்பாளர்கள். நாங்கள் இப்போது பேசிக் கொண்டிருப்பது, தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றியதாகும். இந்த விடயத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) உறுதியாக இருக்கின்றது. அதே போன்று, நாங்கள் அங்கம் வகிக்கும் ஜந்து கட்சிகளின் கூட்டணியான, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் உறுதியாக இருக்கின்றது. அனவரும் ஒன்றுபட்டு இதனை நாம் முன்னெடுக்க வேண்டும்.” – என்றார்.



# இன்றைய ராசி பலன்கள் - 08.04.2024




இன்று மந்தமான நாளாக இருக்கும். கடினமான சவால்களை எதிர்கொள்ள நேரலாம். இறை வழிபாடு வெற்றி அளிக்கும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். நீங்கள் சவாலான சூழ்நிலைகளையும் சந்திக்க நேரலாம்.

உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் காணப்படும். நல்லுறவு பராமரிக்க நீங்கள் பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதுமானதாக காணப்படாது.தவிர்க்க முடியாத மருத்துவ செலவுகள் காணப்படும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். காரமான மற்றும் இனிப்பான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்கலாம். உங்கள் கடின உழைப்பு நல்ல பலன்களை பெற்றுத் தரும்.நன் மதிப்பு பெருகும்.

உங்கள் பணிகளில் வெற்றி காண இயலும். என்றாலும் நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் சில ஆரம்ப கால தடைகள் காணப்படும். இது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்துக்குச் செல்லும்.

அனுசரித்து போவதன் மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் காணலாம். பெரியவர்களின் ஆலோசனை பின்பற்றுவது நல்லது.

உங்கள் தேவைகளை சமாளிக்க போதிய அளவு பணம் கிடைக்கும். என்றாலும் உங்கள் குடும்ப காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று வளமான நாளாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இன்று பல முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு நீங்கள் பாராட்டு பெறுவீர்கள்.

குடும்பத்தில் அமைதி காணப்படும். உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் குடும்பத்தின் பிற உறுப்பினர்களிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சிறந்த சேமிப்பை பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியமான வாழ்விற்கான சூழ்நிலை காணப்படும்.




வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் உங்கள் கவனத்தை திசை திருப்புங்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சிப்பூர்வமாக இருப்பதை விட யதார்த்தமாக செயல்படுவது நல்லது. இன்றைய சூழ்நிலையை நீங்கள் அமைதியாக கையாள வேண்டும்.

நீங்கள் சேவை மனப்பான்மையோடு பணி புரிவதால் உங்களின் முன்ஜாக்கிரதை உணர்வு உங்களுக்கு சாதகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் உங்களை மேம்படுத்திக் கொண்டு தவறுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.

குடும்ப உறுப்பினர்களிடம் நல்லுறவு பராமரிப்பதில் சற்று கடினம் காணப்படும். சிறந்த அணுகுமுறை மூலம் சிறந்த குடும்ப மதிப்பை பெறலாம்.

செலவுகள் அதிகமாக காணப்படும்.




இன்று அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இன்று சில பதற்றமான சூழ்நிலை காணப்படும். குல தெய்வ வழிபாடு மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். சக பணியாளர்களுடனான தொடர்பு பயனுள்ளதாக அமையாது.

நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் மோதல்கள் காணப்படும். உங்கள் துணையுடன் பழகும் போது அமைதியை மேற்கொள்ளவும்.

நீங்கள் செலவுகளை தவிர்க்க இயலாது. கவனமுடன் செலவு செய்வது சிறந்தது.

ஆரோக்கியம் மிதமாக காணப்படும். கண் பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு மிகவும் சிறப்பான நாள். நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் அதில் வெற்றி பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்தித்து அவர்களின் நட்பை பெறுவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

உங்கள் பணியில் திருப்தியான பலன்களை நீங்கள் காணலாம். உங்கள் பணிகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் அன்பை வெளிப்படுத்த இது உகந்த நாள். நீங்கள் உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று சுதந்திரமான நிதி நிலைமை காணப்படும். நீங்கள் சிறிது பணம் சேமிப்பீர்கள்.

நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். இன்று எழும் எந்த சூழ்நிலையையும் சந்திக்கும் உறுதி மற்றும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். நீங்கள் செய்யும் பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான சொல்லிலும் செயலிலும் இனிமை உணர்வை வெளிபடுதுவீர்கள். இது உறவின் மதிப்பை உயர்த்தும்.

நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். நீங்கள் சிறிது பணம் சேமிப்பீர்கள்.

இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். அதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் விவேகத்துடன் சிந்தித்து செயல்பட வேண்டும். அதிகமாக யோசிப்பதை தவிர்க்க வேண்டும். பாதகமான சூழ்நிலைகள் ஏற்படும் எனபதால் உங்கள் செயல்களை கவனமாகச் செய்ய வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது.

காதலின் நடவடிக்கைகளை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையுடனான உறவு நல்லுறவாக இருக்க இது மிகவும் அவசியம்.

இன்று கையில் போதிய அளவு பணம் காணப்படாது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

அதிகமாக உணர்ச்சி வசப்படுவதையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.04.2024




இன்று மந்தமான நாளாக இருக்கும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். நீங்கள் பணி மாற்றம் விரும்புவீர்கள். இதனால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

நீங்கள் உங்கள துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய உணர்வை நீங்கள் தவிர்த்து மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. கூடுதலான தேவையற்ற செலவுகள் காணப்படும்.

குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று அதிக எதிர்பார்ப்புடன் இருக்காதீர்கள். இன்று சில சௌகரியங்களை இழக்க நேரும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் பொது விழாக்களில் கலந்து கொள்வதும் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

முறையாக திட்டமிட்டு பணியாற்ற இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று காதல் விவகாரங்களுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் தேவையில்லாத சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் பணத்தை வீணாக்குவீர்கள். பணத்தை சேமிக்க இயலாது. தேவையற்ற செலவுகள் காணப்படும்.

உங்கள் தாயின் ஆரோக்கியம் குறித்து கவலைப்படுவீர்கள்.




இன்று உங்களுக்கு துடிப்பான நாளாக இருக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரினளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சில உணர்வுகளை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பண வரவு சீராக இருக்கும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். இன்று அமைதி தேவையெனில் தைரியம் உறுதி மற்றும் நம்பிக்கை அவசியம்.

இன்று உங்களுக்கு அதிக பணிகள் காணப்படும். பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். பணிகளை மேற்கொள்ளும் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணத்தில் கவனம் தேவை.

பதற்றம் காரணமாக செரிமானம் மற்றும் தலைவலி பிரச்சினை காணப்படும்.










# ‘சாந்தன் ஏன் சந்தனமானார்?’ நினைவு நிகழ்வு நேற்று யாழில்!

மறைந்த தில்லையம்பலம் சுதேந் திரராஜாவின் (சாந்தன்) நினைவு களுடன் நிகழ் நாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

“சாந்தன் ஏன் சந்தனமானார்?“ எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பா ணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் போராளிகள் நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சாந்தனின் உரு வப்படத்திற்கு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் நினைவுரைகள், சிறப் புரைகள் மற்றும் சாந்தன் எழுதிய நூல் தொடர்பான உரைகளும் இடம் பெற்றன..

அத்தோடு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கலாநிதி ஆறு திரு முருகன், சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன், பேராசிரியர் கே.ரிகணேச லிங்கம், தவத்திரு வேலன் சுவாமி கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண் டனர்.











